செ.வெ.எண்: 35 நாள்:27.08.2020

கரூர் மாவட்டம்

**கரூர் மற்றும் குளித்தலை நகராட்சிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் கபசுரக்குடிநீரை இலவசமாக வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் உத்தரவு**

**அதன் விபரம் வருமாறு:**

கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் ஏதும் இல்லாமல், தொற்று பாதிப்பு உறுதி செய்த நபர்களுக்கு சித்த மருத்துவ முறைப்படி கரூர் நகரத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு சித்த மருத்துவ சிகிச்சை மையத்தில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் படுக்கை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைப்பதற்கு செய்யப்படவேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் (27.08.2020) இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் கரூர் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், கொரோனா தொற்றுக்கான அறிகுறிகளாக கருதப்படும் சளி, காய்ச்சல், இருமல், மூச்சுத்திணறல் உள்ளிட்ட அறிகுறிகள் ஏதும் இல்லாமல், தொற்று பாதிப்பு உள்ளவர்களுக்கு சித்த மருத்துவ முறைப்படி சிகிச்சை அளிக்க ஏதுவாக கரூர் நகரத்தில் அமைந்துள்ள, அரசு மருத்துவமனையில் (பழைய அரசு தலைமை மருத்துவமனை) “சிறப்பு சித்த மருத்துவ சிகிச்சை மையம்” அமைக்கப்பட்டு உள்ளது.

தொற்றுக்கான அறிகுறிகளுடனும், உடல்நிலை சற்று அதிக பாதிப்புடனும் காணப்படும் நபர்களுக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஏற்கனவே சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. தொற்றுக்கான அறிகுறியே இல்லாமல், நல்ல உடல்நலத்துடன் இருந்து தொற்று பாதிப்பு உள்ள நபர்களுக்கு சித்த மருத்துவ சிகிச்சை பிரிவில் தகுந்த சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமன்றி, மூச்சுப்பயிற்சி, யோகா பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகள் சித்த மருத்துவ அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகிறது. உளவியல் நிபுணர்களால் மனதிற்கு ஆறுதல் மற்றும் தன்னம்பிக்கை அளிக்கும் வகையிலான தகவல்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு நபரும் அலோபதி மருத்துவர்களாலும் தொடர்ந்து கண்காணிக்கப்படு வருகின்றனர். அலோபதி மருத்துவர்களும், சித்த மருத்துவர்களும் ஒருங்கிணைந்து இந்தப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், சிகிச்சை பெற்று வருகின்றவர்களின் மனஅழுத்தத்தை போக்கவும் மற்றும் பொழுதுபோக்கிற்காக மெல்லிய இசை, நாளிதழ், வார மற்றும் மாத இதழ் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சதுரங்கம், கேரம் உள்ளிட்ட விளையாட்டு அம்சங்களும் வழங்கப்பட்டு உள்ளது. தற்போது பெண்களின் கோரிக்கை ஏற்று பல்லாங்குழி, பரமபத வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு மையத்தில் அனுமதிக்கப்படும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே பிரத்யேக பிரிவுகள் உருவாக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக ஆண்கள் மற்றும் பெண்கள் சிகிச்சை பிரிவிற்காக 84 படுக்கை வசதிகள் அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், வரும் காலத்தில் கூடுதல் படுக்கை வசதிகள் தேவைப்பட்டால் பயன்படுத்தி கொள்ளும் வகையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய 80 படுக்கைகள் தயார் செய்வதற்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், 15 மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட, உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆற்றல்கொண்ட கபசுரக்குடிநீரை கரூர் நகராட்சிக்குட்பட்ட **1.வேலுச்சாமிபுரம், 2.திண்ணப்பா தியேட்டர் கார்னர், 3. வெங்கமேடு எம்.ஜி.ஆர் அருகில், 4.ஐந்துரோடு, 5.காமராஜ் மார்கெட், 6.பேருந்துநிலையம் ரவுண்டானா, 7.ஜவகர் பஜார்(தாலுக்கா ஆபிஸ் அருகில்), 8.மக்கள்பாதை, 9.உழவர்சந்தை, 10.பசுபதிபாளையம் ரவுண்டானா, 11.வெற்றி தியேட்டர் அருகில், 12.தொழிற்பேட்டை, 13.தெற்குகாந்திகிராமம் டபுள்டேங், 14.ராயனூர் பஸ்டாப், 15.தாந்தோணி பிரிவு அலுவலகம் மற்றும் குளித்தலை நகராட்சி உழவர் சந்தை** ஆகிய இடங்களில் தினந்தோறும் காலை 6.00 மணி முதல் 8.00 வரை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கும் வகையில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட வேண்டும் என்று நகராட்சி ஆணையர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிட்டார்.

பொதுமக்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொரோனா தொற்றில் இருந்து தங்களை தற்காத்துக்கொள்ள கபசுரக்குடிநீரை தவறாமல் பருக வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவையடுத்து நாளைமுதல் மேற்சொன்ன பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கிளில் கபசுரக்குடிநீர் தினந்தோறும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்ரமணியன், கரூர் நகராட்சி ஆணையர் திருமதி.சுதா, சித்த மருத்துவர்கள் மரு.பர்வேஷ், மரு.கவிதா, கரூர் வட்டாட்சியர் திருமதி.அமுதா ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் , கரூர் .**